முதல்வரின் பொற்கால ஆட்சியில் 'கலைஞர் கனவு இல்லம்' திட்டத்தின் கீழ்

# ஓர் ஆண்டில் ஒரு இலட்சம் வீடுகள் - வரலாற்றுச் சாதனை!


## சட்டப்பேரவையில் – அமைச்சர் இ.பெரியசாமி விளக்கம்!

**சென்னை, மார்ச் 20-**

**சட்டப்பேரவையில் பட்ஜெட் மீதான விவாதத்தில் அ.தி.மு.க. உறுப்பினர் செல்லூர் ராஜு பேசும்போது கலைஞர் கனவு இல்லம் திட்டம் குறித்து பேசினார். அப்போது ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் இ.பெரியசாமி குறுக்கிட்டு கலைஞர் கனவு இல்லம் திட்டத்தில் ஓர் ஆண்டில் ஒரு இலட்சம் வீடு என்பது வரலாற்றுச் சாதனை என்று குறிப்பிட்டார்.**

சட்டப்பேரவையில் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் இ.பெரியசாமி பேசியதாவது:-

உறுப்பினர் செல்லூர் ராஜு அவர்கள், கலைஞர் கனவு இல்லம் திட்டத்தின்கீழ், கடந்த ஆண்டு ஒரு இலட்சம் வீடுகளுக்கு கிட்டத்தட்ட 3,700 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்து, முதலமைச்சர் அவர்கள் அறிவித் தார். கிட்டத்தட்ட ஒரு இலட்சம் வீடுகளில், 50 ஆயிரம் வீடுகள் முழுமையாகக் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. இதுவரை வரலாற்றில் இல்லை. (மேசையைத் தட்டும் ஒலி) இப்போது கிட்டத்தட்ட 40 ஆயிரம் வீடுகளுக்கு centring போட்டு முடிக்கப்பட்டுவிட்டன.



நம்முடைய பொற்கால ஆட்சியில், தளபதி அவர்களுடைய பொற்கால ஆட்சியில் கலைஞர் கனவு இல்லம் திட்டத்தின் கீழ் அனைவருக்கும், யார், யார் கேட்டு வந்தார்களோ, அனைத்து கட்சியினருக்கும், அனைத்து மக்களுக்கும் மிகச் சிறப்பான வீடு கட்டும் திட்டம் கலைஞர் கனவு இல்லம்தான்.

ஒன்றை நான் உறுப்பினர் அவர்களிடம் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். உங்களுடைய ஆட்சிக் காலத்திலே, அம்மையார் அவர்களுடைய ஆட்சிக் காலத்திலே பசுமை வீடுகள் கட்டும் திட்டத்தின்கீழ் நீங்கள் கட்டினீர்களே, கொடுத்தீர்களே அல்லவா. உங்களுடைய கட்சிக்காரர்களைத் தவிர, வேறு எந்தக் கட்சிக்காரர்களுக்காவது கொடுத்தீர்களா? உங்களுக்கு பாராட்டத்தான் மனது இல்லை. பசுமை வீடுகளை யாருக்கு கொடுத்தீர்கள்? பசுமை வீடுகள் கட்டித் தரப்படும் என்று நீங்கள் அறிவித்துவிட்டு சென்றுவிட்டீர்கள்.

எங்களுடைய முதலமைச்சர் அவர்கள் ஆட்சிக்கு வந்த பிறகுதான்நீங்கள் அறிவித்த 30 ஆயிரம் பசுமை வீடுகள் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் கட்டப்பட்டிருக்கின்றன.

ஒரு இலட்சம் பசுமை வீடுகள் கட்டித் தரப்படும் என்று நீங்கள் அறிவித்தீர்கள். அதைக்கூட நீங்கள் கட்டவில்லை. ஒரே ஆண்டில் ஒரு இலட்சம் வீடுகள். கடந்த ஆண்டு அறிவித்தார்கள். இந்த ஆண்டு மே மாதம் 31 ஆம் தேதிக்குள் ஒரு இலட்சம் வீடுகளும் முழுமையாக இதுவரை வரலாற்றில் இல்லாத அளவுக்கு கட்டி முடிக்கப்படும்.

ஒவ்வோர் ஆண்டும் ஒரு இலட்சம் வீடுகள் கட்டித் தருகிறோம். எல்லோருக்கும் எல்லாம். இப்போது எங்கு சென்றாலும் யாரும் எங்களுக்கு வீடு இல்லையென்று கேட்கவில்லை. 8 ஆண்டுகளில், 8 இலட்சம் வீடுகள் கட்டித் தரப்படும் என்று எங்களுடைய முதலமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். சொன்னதைச் செய்பவர், சொல்லாததையும் செய்யக்கூடிய எங்களுடைய முதலமைச்சர் அவர்கள் இதுவரை வரலாற்றில் இல்லாத அளவுக்கு கலைஞர் கனவு இல்லம் திட்டம் மக்களால் வரவேற்கப்படுகிறது.

மக்கள், எங்களுடைய முதலமைச்சரைப் போற்றுகிறார்கள். கலைஞரின் கனவு இல்லம் திட்டமாக இருந்தாலும் சரி, முதலமைச்சரின் சாலைத் திட்டமாக இருந்தாலும் சரி. இன்றைக்கு தமிழ்நாடே எங்களுடைய முதலமைச்சர் அவர்களைப் பாராட்டிக் கொண்டிருக்கிறது. வரலாற்றில் இல்லாத அளவுக்கு இன்றைக்கு ஊரக வளர்ச்சித் துறையிலே சிறப்பாக திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு வருகிறது. உங்களுக்கு பாராட்ட மனது இல்லையென்றாலும், பேசாமல் இருங்கள்.

இவ்வாறு அமைச்சர் இ.பெரியசாமி பேசினார்.

---

முதலமைச்சர் மருத்துவக் காப்பீடு திட்டத்தில்

# தமிழ்நாட்டில் 1.47 கோடி குடும்பங்கள் பயன்பெறுகிறார்கள்!

## சட்டப்பேரவையில் – அமைச்சர் மா.சுப்பிரமணியன் தகவல்!

**சென்னை, மார்ச் 20 -**

**சட்டப்பேரவையில் பட்ஜெட் மீதான விவாதத்தில் அ.தி.மு.க. உறுப்பினர் பொன். ஜெயசீலன் பேசியபோது மருத்துவ காப்பீடு திட்டம் குறித்து பேசினார். அப்போது குறுக்கிட்டு அமைச்சர் மா.சுப்பிரமணியன் பேசியதாவது:-**



**அமைச்சர் மா.சுப்பிரமணியன்:** முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டுத் திட்டத்தைப் பொறுத்தவரையில், முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலோடு, தமிழ்நாட்டில் 1 கோடியே 47 இலட்சம் குடும்பங்கள் பயன்பெற்று கொண் டிருக்கின்றனர். கடந்த கால அ.தி.மு.க. ஆட்சியில் premium தொகை ரூ.699/ ஆக இருந்தது. தற்போது ரூ.849/ ஆக உயர்த்தப்பட்டிருக்கிறது. கடந்த கால ஆட்சியில் குடும்பத்தின் ஆண்டு வருமானம் ரூ.72,000/ ஆக இருந்தது,

தற்போது ரூ.1,20,000/ ஆக உயர்த்தப்பட்டிருக்கிறது. கடந்த காலத்தில் காப்புறுதி தொகை ஒரு வருடத்திற்கு ரூ.2,00,000/ ஆக இருந்தது, தற்போது ரூ.5,00,000/ ஆக உயர்த்தப்பட்டிருக்கிறது. கடந்த கால ஆட்சியில் 1,450 சிகிச்சை முறைகள் இருந்தன. தற்போது 2,053 சிகிச்சை முறைகளாக உயர்த்தப்பட்டிருக்கின்றன.

கடந்த காலத்தில் அங்கீகரிக்கப்பட்ட மருத்துவமனைகளின் எண்ணிக்கை 970, தற்போது 2,175. கடந்த காலத்தில் பிரத்யேக சிகிச்சை முறைகள் இரண்டு, தற்போது எட்டு. இப்படி முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டுத் திட்டம் என்பது மிகச் சிறப்பான வகையில் தமிழ்நாட்டில், இந்தியாவிலேயே மிகச் சிறப்பான வகையில் பயன்பாட்டில் இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) சட்டமன்ற உறுப்பினர் எந்த மருத்துவமனையில் அதுபோன்று காலதாமதம் என்பதைக் குறிப்பிட்டுச் சொல்வாரே யானால், நிச்சயம் துறையின் சார்பாக அவர்களைக் கேட்டு, தகுந்த நடவடிக்கை எடுக்க உத்தரவிடப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மணியடிக்கப் பெற்றது)

**பொன். ஜெயசீலன்:** இப்பொழுது அது தொடர்ந்து நடைபெற்று வருகிறது. அது சார்ந்த புள்ளிவிவரங்களை அமைச்சர் அவர்களுக்கு தருவதற்கு நான் தயாராக இருக்கின்றேன். அதுபோல, முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டுத் திட்டத்தின்கீழ் நரம்பியல், தலைகாயம் போன்ற நோய்களுக்கும் சிகிச்சை அளிப்பதற்கு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல, எங்கள் ஊரில் விலங்குகள் அதிகம் இருக்கின்றன. விலங்குகளால் தாக்கப்படும் நபர்களுக்கு வனத் துறையின் மூலமாக ரூபாய் 59 ஆயிரத்து 100 மட்டுமே வழங்கப்படுகிறது. அவர்கள் எவ்வளவு பெரிய காயத்தை அடைந்தாலும் அவர்களுக்கு ரூபாய் 59 ஆயிரத்து 100 மட்டும்தான் வழங்கப்படுகிறது. எனவே, அவர்களும் முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தின்கீழ் சிகிச்சைப் பெற்று, அவர்கள் உயிர் காப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன். அதைப்போல விலங்குகளால் தாக்கப்பட்டு, இறக்கின்ற பசு மாடுகளுக்கு ரூ.30,000/ மட்டுமே இழப்பீடாக வழங்கப்படுகின்றது. எனவே, அதனையும் உயர்த்தி ரூ.70,000/ஆக தர வேண்டுமென்ற கோரிக்கையினையும் தங்கள் வாயிலாக இந்த அவைக்கு முன்பாக வைக்கின்றேன்.

இவ்வாறு விவாதம் நடைபெற்றது.

---

# மாநகர் போக்குவரத்துக் கழக ஊழியர் முன்னேற்றச் சங்க நிர்வாகிகள் தேர்தல் ஒத்திவைப்பு!

## தலைமைக் கழக அறிவிப்பு!

**“தொழிலாளர் முன்னேற்றச் சங்கப் பேரவையில் இணைந்து செயல்பட்டு வரும் மாநகர் போக்குவரத்துக் கழக ஊழியர் முன்னேற்றச் சங்கத்தின் (பதிவு எண். 605/MDS, பேரவை இணைப்பு எண். 287) நிர்வாகிகள் தேர்தல், வழக்கறிஞர் அ.சரவணன்** (தணிக்கைக் குழு உறுப்பினர், தி.மு.க.) **அவர்கள் தலைமை தேர்தல் ஆணையாளராக நியமிக்கப்பட்டு, பணிமனை வாரியாக தலைமைக் கழகத்தால் நியமிக்கப்படும் ஆணையாளரைக் கொண்டு பணிமனைத் தேர்தல் நடைபெறும்” என தேர்தல் அட்டவணையுடன் கூடிய அறிக்கை தொ.மு.ச. பேரவை பொதுச்செயலாளர் அவர்களால் 26.02.2025 முரசொலியில் அறிவிக்கப்பட்டு, 17.3.2025 அன்று பணிமனை தோறும் வேட்புமனுக்கள் பெறப்பட்டுள்ள நிலையில், நிர்வாகிகள் தேர்தல் ஒத்தி வைக்கப்பட்டு, வருகிற மே மாதம் முறையாக அறிவிக்கப்பட்டு தேர்தல் நடைபெறும்.**

**தலைமைக் கழகம்**
தி.மு.க.

நாள்- 18.03.2025

---

சென்னை இராணி மேரி கல்லூரியில் கலைஞர் நூற்றாண்டு நிறைவையொட்டி

# கலைஞர் படைப்புகள் குறித்து பன்னாட்டுக் கருத்தரங்கம்!

## அமைச்சர் கோ.வி. செழியன் சிறப்புரை!

**சென்னை, மார்ச் 20–**

**சென்னை, இராணி மேரி கல்லூரியில், ‘‘கலைஞர் நூற்றாண்டு நிறைவு பன்முக நோக்கில் கலைஞர் படைப்புகள் பற்றிய பன்னாட்டுக் கருத்தரங்கில்’’ நேற்று முன்தினம் (18.03.25) உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி.செழியன் ஆற்றிய உரை வருமாறு:–**

வங்கக் கடற்கரையோரம் சங்கத் தமிழ் வளர்க்கும் நூற்றாண்டு கடந்து 110 வது ஆண்டில் இராணி மேரி கல்லூரி. தமிழ் மொழியின் பெருமையினை உலகம் அறியவும். உலகம் போற்றும் தமிழின் பெருமையை அடுத்த தலைமுறையினர் தமிழ்க் கல்வியை தனிக் கல்வியாக வளர்க்கவும் தமிழ் ஆய்வுகளை வளர்க்கும்.. ஆய்வாளர்களை உருவாக்கும் இந்த தமிழ்த் துறையின் பவள விழா கொண்டாடுகிறது. முத்தமிழுக்கு உரம் சேர்த்து முத்தமிழ் வித்தகராய் உலகத் தமிழர் அனைவருக்கும் உன்னதம் சேர்க்கும் உயர் கொள்கைகளால் எழுந்து நின்ற தலைவராம் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களது படைப்புகளை ஆராய்ந்து நடத்தும் கருத்தரங்கில் பன்முக நோக்கில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் படைப்புலகம் ஒரு பன்னாட்டுக் கருத்தரங்கை முன்னெடு த்துள்ளது.

உலகம் முழுவதும் வாழும் தமிழர்களின் இதயங்களில் முத்தமிழ் அறிஞரும் அவரது படைப்புகளும் வாழ்ந்து கொண்டிருக்கின்றன. இந்தக் கருத்தரங்கிற்கு கத்தார், மலேசியா, சிங்கப்பூர், இலங்கை கம்போடியா, கனடா போன்ற பல்வேறு நாடுகளில் இருந்தும் ஆய்வுக் கட்டுரைகள் வந்து சேர்ந்துள்ளன. மேலும் புதுவை, கர்நாடகம், கேரளம், ஆந்திரா போன்ற பல்வேறு மாநிலங்களில் இருந்தும் வந்துள்ளனர்.

ஒரு மாபெரும் வரலாற்று ஆவணமாக கலைஞரின் முத்தமிழ் ஆற்றலை எடுத்துரைக்கும் வகையில் அடுத்த தலைமுறைக்கு வரலாறாக எடுத்துச் சொல்லும் பதிவாக இந்த ஆய்வு அமைந்துள்ளது. இதனைத் தமிழ்த் துறையினர் இந்த 75 கால வரலாற்றில் முதல்முறையாக ஒரு பன்னாட்டுக் கருத்தரங்கம் என ஏற்பாடு செய்துள்ள பேராசிரியர், துறைத் தலைவர் ஆகியோருக்கு நன்றி.



கலைஞரின் படைப்புகள் அனைத்தும் சமூகம் சார்ந்தவைகளே ஆகும். கவிதைகள், கவியரங்கக் கவிதைகள், சிறுகதைகள், சமூக நாவல்கள், வரலாற்று நாவல்கள், நாடகங்கள், திரைக்கதை வசனம் எழுதிய திரைப்படங்கள், திரையிசைப் பாடல்கள் இடம்பெற்ற படங்கள், தொலைக்காட்சித் தொடர்கள், இலக்கிய உரைகள், கட்டுரைகள், நூல்கள், கடித இலக்கியம், நினைவுப் பதிவுகள், தன்வரலாறு

கலைஞரிடம் நெடுங்காலமாக நீடித்துவந்த வாதாடும் திறன் (Advocating) ‘பராசக்தி’ (நீதிமன்றத்தில்), ‘மனோகரா’ (ராஜ தர்பாரில்) போன்று நீண்ட காலங்களுக்குப் பிறகு வேறொரு சட்டகத்தில் (Democratic Paradigm) இது வெளிப்பட்டுள்ளது. பின்னாளில் வந்து சேர்ந்த பல அரசியல் விமர்சனப் படங்களுக்கு நல்ல அரசியல் குறிப்புகளை வழங்கிய படமாக இதைக் குறிப்பிடலாம். 1980களில் தமிழ்நாட்டிலும் ஈழத்திலும் இருந்த அரசியல், சமூக நிலைமை என்னவென்பது அன்றைய இளைஞர்களுக்கு நன்றாகவே தெரியும். எனவே ‘வீரன் வேலுத்தம்பி’ என்கிற படத்தின் தலைப்புச்சொல் யாரை, எந்தக் கருத்து நிலையைக் குறிக்கிறது என்பதும் அனைவருக்கும் தெரியும்; கலைஞரின் திரைக்கதைகள் எப்போதும் கதாநாயகர்களின் வன்முறை சாகசத்தால் தீர்வை எட்டுகிறவைகளாக அமைந்ததில்லை.

**கலைஞர் தமிழுக்கு ஆற்றிய தொண்டுகள்**

திருக்குறளை பொதுத்தளத்தில் பிரபலமாக்கியது. குறள், பாரதிதாசன் கவிதைகளை மாணவர்கள் மனனம் செய்ய கட்சி மற்றும் ஆட்சி வழியாகத் தொடர்ந்து ஊக்குவித்தது. வள்ளுவர் உள்ளிட்ட வைதீகத்திற்கு எதிரான ஆளுமைகளை தொடர்ந்து மக்கள் மன்றத்திலும், அறிவுலகிலும் முன்னிறுத்தியது.

விமர்சனங்களுக்கு அஞ்சாமல் சமத்துவப் பொங்கல், தைப்புத்தாண்டு , 133 அடி வள்ளுவர் சிலை என்று எதிர் கலாச்சாரச் செயல்பாடுகளை சலிப்பின்றி முன்னெடுத்தது. ஆசியாவின் மிகப் பெரிய நூலகங்களில் ஒன்றான அண்ணா நூற்றாண்டு நூலகத்தை சொந்த வீட்டைப்போல் பார்த்துப் பார்த்துக் கட்டிமுடித்தது

இவற்றையெல்லாம் தாண்டி அவர் தமிழுணர்வை வெகுஜன அரசியலாக மாற்றியவர். தமிழகத்தின் வளர்ச்சியில் முக்கியப் பங்காற்றியவர்களில் மூன்று பேர் முக்கியமானவர்கள். பெரியார்அண்ணாகலைஞர்.

**பெரியார் என்பது புத்தகம்.**

**அண்ணா என்பது நூலகம்.**

**கலைஞர் என்பது செயலகம்.**

ஆதிக்கத்திற்கு எதிராகச் செயல்பட்ட செயலகம்.

8ஆம் வகுப்பு வரை படிக்கும் பெண்களுக்கு திருமண உதவித்தொகை என்று ஆரம்பித்த அந்தத் திட்டம், பிறகு 10ஆம்வகுப்பு, 12ஆம்வகுப்பு என்று வளர்ந்து இப்போது கல்லூரியில் படிக்கும் மாணவிகளுக்கு மாதந்தோறும் உதவித்தொகை என்று உயர்ந்திருக்கிறது. ஒரு கோடி மகளிரை பட்டதாரி ஆக்கியது திராவிடர் இயக்கம். ஒரு ஆட்சியாளன் எப்படி இருக்க வேண்டும் எப்படி சிந்திக்க வேண்டும் எப்படி செயல்பட வேண்டும் என்பதற்கான “பாடத் திட்டம்” syllabus கலைஞர் தான்..

அரசியல் தலைவன் எப்படி சிந்தித்து செயல்பட வேண்டுமென்பதற்கும் அவரே தலை சிறந்த உதாரணம். இந்திய துணைக் கண்டம் கண்ட தலைவர்களில் ஆக சிறந்த தலைவர். இந்தியா போன்ற வளரும் நாடுகளில் எல்லா உரிமைகளும் எல்லோருக்கும் என்பது இயலாமல் போகுமென்பதால்தான் சிலவற்றை இலவசமாக தந்தார்.

கல்வி மேம்பாடு அதை எல்லோருக்கும் கிடைக்க வேண்டுமென்பதற்காக தான்.. ஒரு சிலரே கல்வியில் மேம்படுவதை தவிர்த்து சாமானிய ஏழைக் குடும்பத்திலிருந்து வந்தவர்களுக்கும் கிடைக்க வேண்டுமென்பதற்காகதான்.

நுழைவுதேர்வை ரத்து செய்தார் இன்றைக்கு எதிர்க்கிற கூட்டம் பெருபான்மை மக்களின் விரோதத்திற்கு ஆளாகிதானாகவே நடைமுறைபடுத்தும் காலம் வரும். ஏனெனில் நேற்று வரை அவர்களது சிந்தனைக்கு வராமல் அல்லது எதிராக இருந்ததிட்டங்கள்/ செயல்கள் இன்று அவர்களே அறிவிக்கிறார்களெனில்.. கலைஞர் பெருமகன் செயல்படுத்தியவையே .. இந்தியா முழுக்க தேவைபடுகிற நிலை உருவாகும். இன்றைய தமிழ்நாட்டில் அனைத்து நிலைப் பள்ளிகள், கலைக் கல்லூரிகள், தொழிற்நுட்பக் கல்லூரிகள் மருத்துவக் கல்லூரிகள், ஆட்சித் துறைப் பயிற்சிக்கூடங்கள், நூலகங்கள், தொழிற்சாலைகள், தொழிற்பூங்காக்கள், கணினித்துறை நிறுவ னங்கள் அனைத்திலும் கலைஞர் அவர்களின் எழுதுகோல் வரைந்த திட்டங்களே இன்று நம் கண் முன் எழுந்து நிற்கின்றன.

கலைஞரின் “நெஞ்சுக்குநீதி”யை படியுங்கள். ஓர் அரசியல்வாதியின் பயணம் எல்லாபடி தளங்களும் எப்படி பயணிக்க வேண்டுமென்பதற்கான பாடதிட்டங்கள் syllabus அங்கே கிடைக்கும். உள்ளபடியே கையெழுத்துகளை கொண்டு ஒருவர் ஒரு மாநிலத்தின் தலையெழுத்தை மாற்றிட முடியும் என்பதை சாதித்துக் காட்டியவர் தலைவர் கலைஞர்.

எழுத்தாளர், சிறுகதை ஆசிரியர், இலக்கியவாதி, தொல்காப்பியத்திற்கு விளக்க உரை எழுதியவர், திருக்குறளுக்கு பகுத்தறிவு வழியில் பொழிப்புரைதந்தவர், திரைப்பட உரையாடல் ஆசிரியர், தான் வாழ்க்கையை வரலாறாக எழுதி இன்றும் நாம் அறிய பல பாடங்கள் தந்தவர், கவிஞர், நாடக நடிகர், நாடக ஆசிரியர், கார்ட்டூன்படைப்பாளி, முரசொலி என்ற ஏட்டின் நிறுவன ஆசிரியர்.

கலைஞர் தெளிந்த நீரோடையைப் போல எல்லா நிகழ்வுகளையும் உள்ளடக்கிய அறிவு கருவூலம்.. கலைஞரே அரசியல் தத்துவம். நிறை வாழ்வு வாழ்ந்த ஒரு மனிதரின் அவரது படைப்புகள் உலகம் எங்கிலும் தமிழர்களால் கொண்டாடப்படுகிறது.

இவ்வாறு அமைச்சர் கோவி. செழியன் உரையாற்றினார்.

---

கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டம் காவேரிப்பட்டணம் கிழக்கு ஒன்றியத்தில்

# முதல்வர் பிறந்தநாள் விழா! 1200 பேருக்கு நலத்திட்ட உதவிகள்!

## மாவட்டச் செயலாளர் மதியழகன் எம்.எல்.ஏ. வழங்கினார்!

*கிருஷ்ணகிரி, மார்ச் 20–*

கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டம், காவேரிப்பட்டணம் கிழக்கு ஒன்றியம் பாலேகுளி, எருமாம்பட்டி ஆகிய ஊராட்சிகள் சார்பில், பாலேகுளியில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் 72வது பிறந்த நாள் விழா கொண்டாடப்பட்டது.

விழாவிற்கு கிழக்கு ஒன்றிய செயலாளர் மகேந்திரன் தலைமை வகித்தார். முன்னாள் சேர்மன் ஆதிமகேந்திரன், ஊராட்சி மன்ற முன்னாள் தலைவர்கள் மாதவி முருகேசன், விமலா பெரியசாமி ஆகியோர் முன்னிலை வகித்தனர். மாவட்ட பிரதிநிதி மணி வரவேற்றார்.

நிகழ்ச்சியில், சிறப்பு அழைப்பாளராக கிழக்கு மாவட்ட தி.மு.க. செயலாளர் மதியழகன் எம்.எல்.ஏ. கலந்து கொண்டு, 72 அடி உயரத்தில், தி.மு.க. கொடியேற்றி வைத்து சிறப்புரை ஆற்றி 1200 பேருக்கு இலவசமாக குக்கர் வழங்கினார்.

இதில் தி.மு.க. மாவட்ட அவைத்தலைவர் நாகராஜ், மாநில வர்த்தகர் அணி துணை செயலாளர் கே.வி. எஸ். சீனிவாசன், மாவட்ட துணை செயலாளர் சாவித்திரி கடலரசு மூர்த்தி, மாவட்ட அமைப்புசாரா ஓட்டுனர் அணி துணைத்தலைவர் செந்தில்குமார், பேரூராட்சித் தலைவர் தம்பிதுரை உள்ளிட்ட கழக மூத்த முன்னோடிகள் நிர்வாகிகள் மற்றும் பெண்கள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

---



ஈரோடு கிழக்கு சட்டமன்ற தொகுதி செங்குந்தர் கல்யாண மண்டபத்தில் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமை துறை மற்றும் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி பணிகள் திட்டம் சார்பிலும், மொடக்குறிச்சி சட்டமன்றத் தொகுதி வடிவுள்ள மங்கை திருமண மண்டபத்திலும் நடைபெற்ற சமுதாய வளைகாப்பு விழாவை துவக்கி வைத்து கர்ப்பிணி தாய்மார்களுக்கு சீர்வரிசைப் பொருட்களை அமைச்சர் சு.முத்துசாமி வழங்கினார். நிகழ்வில் மாவட்ட ஆட்சித் தலைவர் ராஜகோபால் சுன்கரா, கே.இ.பிரகாஷ் எம்.பி., வி.சி.சந்திரகுமார் எம்.எல்.ஏ., மொடக்குறிச்சி சி.சரஸ்வதி எம்.எல்.ஏ., மேயர் நாகரத்தினம் சுப்பிரமணியம், துணை மேயர் வி.செல்வராஜ், அரசு அலுவலர் பூங்கோதை உள்ளிட்ட பலர் உள்ளனர்.